235

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
12 APR 1927

I, 6

Registered No. M. 2217. மலர் க. இதழ் ௬.

உதயபாரதி



ப. ராமஸ்வாமி அய்யங்கார்.
பத்ராதிபர்.
திருநெல்வேலி.

THE EASTERN STUDIO

உள்ளடக்கம்.

	விஷயம்.	பக்கம்.
௧.	கீதாஞ்சலி	௱௮௫.
௨.	தமிழும் தமிழரும்.	௱௮௬.
௩.	தாய்	௱௮௯.
௪.	உதயபூமியும், பாரதவருஷமும் ...	௱௯௫.
௫.	இயற்கை வாழ்வின் இன்பம் ...	௨௱௧.
௬.	வேண்டுகோள்	௨௱௮.
௭.	ஸ்ரீ சுப்பிரமணியசிவத்தின் சரிதை ...	௨௱௯.
௮.	நீதியின் நிலையம்—பரதன் ...	௨௱௰௨.
௯.	மகாத்மா காந்தியின் மணிமொழிகள் ...	௨௱௰௬.

குறிப்பு:- தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து நமது உதய பாரதிக்கு மிகுந்த ஆதரவளித்து வரும் அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கி பத்திரிகையின்

வருட சந்தாவை ஒரு ரூபாயாகக் குறைத்துள்ளோம்

ஆதலால் தமிழபிமானமும், தாய்நாட்டுணர்ச்சியுங்கொண்ட கனவான்களனைவரும் உதய பாரதிக்கு சந்தாதாராய்ச் சேர்ந்து எமது முயற்சியை ஆதரிப்பார்களாக.

வருஷ சந்தா விபரம்.

இந்தியா, சிலோன், பர்மா, முதலிய உள் நாட்டிற்கு ௵ 1-க்கு ...	ரூ 1—0—0
பினாங்கு, சிங்கப்பூர். முதலிய வெளி நாட்டிற்கு ௵ 1-க்கு	ரூ. 1—8—0

தனிப்பிரதி விலை அணா இரண்டு.

இதற்குமுன் சந்தா ரூ 1—8—0 கொடுத்திருப்பவர்களுக்கு தயபாரதி 18 மாதத்திற்கு அனுப்பப்படும்.

உதயபாரதி காரியாலயம், திருநெல்வேலி.

ஓம்:

வந்தேமாதரம்.

உதயபாரதி

UDAYA BHARATI.

ஓர் இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

மலர் ௧.

1927-ம் ௵ மார்ச்சு ௴
அக்ஷய-௵ பங்குனி௴

இதழ் ௬.

கீதாஞ்சலி.

பாயு நீரரங்கந்தன்னுள் பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்வும் மரதக வுருவும் தோளும்
தூய தாமரைக் கண்களும் துவரிதழ்ப் பவளவாயும்
ஆயசீர் முடியும் தேசு மடிய ரோர்க் ககலலாமே?

பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேலுமெம் மடியார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொள்மினென்று நின்னோடு மொக்க
வழிபடவருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே

(தொண்டரடிப் பொடியாழ்வார்.)

* * *

நீதியால் வாழமாட்டேன் நித்தலுந் தூயேனல்லேன்
ஓதியு முணரமாட்டேன் உன்னை யுள் வைக்கமாட்டேன்
சோதியே சுடரே யுன்றன் தூமலர்ப் பாதங்காண்பான்
ஆதியே யலந்துபோனேன் அதிகைவீரட்டனீரே.

மன மெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கை யேற்றிச் செறிகடலோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனை யுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடைய கோவே.

(திருநாவுக்கரசு சுவாமிகள்.)

நவ இந்தியா.

(சிவாஜி மன்னனின் வீரமோழிகள்.)

* * *

“மண்ணில் வானோர் வந்திறங்கினரோ?
ஆரிய பாரதம் அமராவதியோ?
சீரிய நவயுகம் சேர்ந்த நாளிதுவோ?
பாரத நாடும்; பங்கமில் நாட்டின்
பேருறுமக்கள், பீடுசால் பொருள்கள்
ஆ! ஆ! புதிய தோற்றமடையும்!
ஆ! ஆ! இந் நற்காட்சியின் உவகை!
ஏதோ அதிசய மந்திரத்தாலிப்
போதே யெல்லாம் புதிய பிறப்பால்
தண்ணொளி பரப்பிச் சர்ந்தமினிமையால்
கண்ணினைக் கொள்ளை கொள்ளுங் காட்சியில்
பயமெனும் பேயது பங்கமுற் றொழிய
ஜயமது முழங்கத் தளைகள் தெரிக்க,
“வீழ்ந்தது, வீழ்ந்தது, கொடுங்கோல் வீழ்ந்தது!
வீழ்ந்த தெதேச்சை யரசியல் வீழ்ந்தது!
ஆழ்ந்தன, ஆழ்ந்தன அதிகாரக் கணம்!
ஆழ்ந்தது மிக்கால் அடிமைசால் வாழ்வே!
சூழ்ந்தன, சூழ்ந்தன ஜோதியு முண்மையும்!
சூழ்ந்தது தருமம்! தொலைந்தது பகையிருள்!
வாழ்ந்தன முன்னாள் மாண்பும் உரமும்!
வாழ்ந்தது, வாழ்ந்தது பாரத நாடே!”
என்னும் முழக்கம் என்னென் றுரைப்பேன்!
இன்னு மென் காதில் எழுமொலி செய்தே.”

(வாணிதாஸன்.)

தமிழும் தமிழரும்.

திருவாளர், ச. சோமசுந்தரபாரதியார், எம்.ஏ. பி.எல், எழுதுவது.

தமிழர் தாமே புறக்கணித்துப் பொருளாக் கொள்ளாத் தமிழ் தற்காலம் நாகரீகப் பிறமொழியாளரால் எள்ளப்படின் இழுக்காமோ? 'தற்செய்யார்', தினந் தாழுநிலை மாற்ற 'அறிவறிந்தாள் வினை' மேவாத் தமிழரிடைத் தளராது தமிழணங்கு தழைவதெங்கன்? 'உள்ளமிலார்', உடைமையிலார், 'வள்ளியமென்னுஞ் செருக்கு' மில்லாத் தமிழ்ப் பெரியார் பலர் தாம் இன்னாள் தம் மிழிவைத் தமிழ்க்கேற்றி அதனழிவு சூழுகின்றார். அறிவேற்ற மடைவதற்கும், திறம் பல பூத்துயர் புதிய வாழ்வு நலமுறுதற்கும், தமிழ்மொழியே இடையூறு என்றியம்புகின்றார். மேனாட்டார் பயின்றுவரும் பௌதிக நற்பல்கலையும் இறைமை நலத்துறை வகையும், தமிழ் மொழியாற் பெறவொணாதாய்ப் பேசுகின்றார். இந்தியரோர் இனக்குடிமை உணர்வுற்று, ஒற்றுமை பெற்றுயர்தற்கு தமிழ் வளர்த்தல் தடையெனவும் முழங்குகின்றார். மடி மடிமேல் வளர் தமிழர் மயக்கத்தால் தம் முன்னோர் குன்றாத குடி விளக்கம் மறந்து தங்கள் அடிமை நிலைத் தளர்வால் தம் உரமற்று ஆழ்ந்துறங்குபவர் தமக்கிரங்காதவர் கூற்றைப் பொருட்படுத்திற் றவறாமன்றோ?

'குமரி முதற் பனிவரை மட்டுறுபவர்கள் ஒரு மொழி கொண்டன்றி ஒன்றார்' என்பதற்கு நியாயமுண்டோ? பல மொழிகள் நிலவு தனிப் பெருநாடு பல உலகில் ஒருமையுடன் பெருமையு முற்றுயரக் காண்போம். ஐக்கிய மாகாணங்கள் என்னும் அழகிய பெயர் படைத்து நாகரீக வுலகத்தின் நாயகமாய்த் தலை நிற்குந் தனி யரசில், பல மொழிகளுடையாரே குடிமை யாள்வார், மேலப் புத்துலகத்தின் வடதலையில் கானடா நன்னாட்டினிலும், ஆங்கிலமும் பறங்கியு மென்றிரு மொழியுமருவி வளர்ந்தியங்கக் காண்போம். வானவர் நாடென வழங்குஞ் சீனர் பழம் பெருநாட்டில் தொன்று தொட்டின்றளவும் பல்வேறு நல் மொழிகள் பயிலுகின்றார். இன்ன பெரு நாடனைத்தும், நிலப்பரப்புங் குடிப் பெருக்கும் இந்திய நாடதற்கு எத்

துணையும் குறையாமை கொண்டுடையவேனும் ஒற்றுமை, நல்லுணர்வு, நிதி பலவேறு மொழி பயில்வார் நிதம் வளர்க்க வளம் பெருகிச் செழுமை செறி செருக்குடனே நிலவக் காண்போம். எனவே ஒருமை யரசுயர்வுக்குத் தமிழாட்சி இன்னாட்டில் தடைதராது.

இனி, மேனாட்டிற் பௌதிகமும் புதுக்கலைகள் பலவுமெழுந்துலவு முன்னர் நிலவி நின்ற மொழிகளை அம்மொழி யுடையார் புத்தறிவுப் பெரு நறவுக்குதவாத கலன்களெனப் புறக்கணித்துப் புதுமொழிகள் தேடியவர் வளர்க்கவில்லை. அறிவுரிமைக் குறைவிடமாய்க் கருதிவருமிக்கால ஆங்கிலமும் ஜருமனியம் பறங்கி யெனும் பாஷைகளும், புதுக்கலையும் புத்தறிவும் புகுந்தவற்றை வளஞ்செயுமுன், இலக்கணமும் இலக்கியமு மில்லாத இளஞ்சிறிய குழவி மொழி நிலையில் நெடுங்காலம் அவை நிலவியுளவாம். புத்தறிவை நத்திய அம்மொழியுடையார் தம்மொழியிலறிவுதரும் புதுக்கலைகள் புகுத்தி நலம் படைத்தல்லால், குறை மொழிமேற்கூறி வைத்துத் தம்மிழிவு பேணு பழிபூண்டாரில்லை. அவர் மொழி போலல்லாமல், அறிவெட்டாத் தொல்லரிய பழமையொடு ஆக்க வளம் பெற்றிலங்குந் தமிழினிலே புதுக்கலைகள் தவழ்ந்திலகி வீறுபெறத் தமிணலமுங் கலைவளமும் ஒருங்கோங்குந் தகையவாகும். ஓர்ந்துணரார் இதை மறுப்பர்: உண்மை யிஃதே.

நாட்டினலம் வளர்ப்பதற்கு நாட்டினரெவ்வகுப்பினரும் உயர்தல் வேண்டும். மொழி வளப்பமில்லார்பால் அறிவாக்கம் உயர்வதில்லை. அகன்றாழ்ந்த அறிவொட்பம், ஆன்ற அறநூற்றிட்பம், மாண்ட மனையாக்கமொடு வேண்டு மாசேற்றமும் உற்று மக்கள் பெருமை பெறுவதற்கெல்லா முன்னர் முதலுதவுவது மொழிவளப்பம். குதலை மொழி மிழற்றிய தங் குல மொழிபோல் அறிவு திரு ஆற்றல் வளம் பெருக்குதற்கு மதலை பிறிதில்லையாகும். தொல் வளமும் இலக்கண நற் செவ்விகளும் அமையாத சிறு மொழிக ளாமேனும், தம் மொழியே மதிநுட்பம், நூலாக்கம், சான்றாண்மை, சமுதாய வெறுக்கையெலாம் தழைவிக்கத் தக்கதாகும். நாகரிகமென்றெழுந்தது,

அன்றுள செந்தமிழுடையார் தளர்வடையின், அவரியலின் சோர்வல்லால் மொழியிடை யோர் குறையுமில்லை. தமிழ்த் தாயும் அவளீன்ற சில குதலை மொழிமாருமன்றி, நந்நாட்டுள மொழிகளனைத்தும் வட பெரு மொழியின் வழிவந்த தொடர்புடைய: அவை பயில்வார் பெரும் பாலும் பிணக்கற்ற மொழியொருமை யியலிணக்கம் பேணற் பாலார். தமிழுழுவற் றொல்லுரிமை வடமொழியே வழுத்தி நிற்கும். குறையாத வளமுடைய வடசொல்லும், பிழையாத கன்னிமையார் தமிழ்ச் சொல்லும் எல்லையறு தொல்லைமுதல் இன்றளவு மருவி யொன்றி நிலவு நமதிந்திய நாட்டேனோ தான் மொழி யிகல் போல் பழி தூறு மழிவேக்கம் வந்ததின்று? மொழி பேணார் முன்னேற்றமோக நலமுண ரொணாதார். நாட்டினலம் நமதாக்க மீரண்டில்லை, ஒன்றேயாகும். பெரு நலம் நம்மவர் வேண்டின் 'தெருவெல்லாந் தமிழ் முழக்கஞ் செய்யவேண்டும்'.

* * *

தாய்

காலஞ்சென்ற ஆசிரியர், ஸ்ரீ வ. வே. ஸு. அய்யர் எழுதியது.

(முன் ௱௬௨-ம்பக்கத் தொடர்)

நெப்போலியன் தாயார் முப்பது வயதாக இருக்கையிலேயே வைத்வியதசை அடைந்துவிட்டாள். ஏழெட்டுக் குழந்தைகள். அவள் புருஷன் தேடிவைத்த சொத்து மிகச் சொற்பம். ஆனால் குடும்பத்தை எப்படியோ காப்பாற்றிக் கொண்டு அவள் தன் குழந்தைகளுக்கு மன உறுதியும் பிடிவாதமும் ஏறும் படிக்கும், அதே காலத்தில் தீயகுணங்கள் ஏறா திருக்கும் படிக்கும் பார்த்துக் கொண்டு வளர்த்துவந்தாள். நெப்போலியன் சக்ரவர்த்தியாகிப் பெருவாழ்வு வாழ்ந்தகாலத்தில், தான் இந்த உன்னதமான நிலைமைக்கு வந்ததற்குப் பிரதான சாதனமாக இருந்தது தன்னுடைய பிடிவாதத்தையும், உற்சாகத்தையும், தன் அடக்கத்தையும் தன் தாய் வளர்த்துவந்ததே என்று சொல்லி யிருக்கிறான். அவனை ஒருவராலும் அடக்க முடியாதாம். ஆனால் அவன்

தாய் நேயமும் கண்டிப்பும் நேர்மையும் கலந்த ஆட்சியினால் அவனை வசப்படுத்தி விடுவாள். அவள் அவனிடம் கடைசிவரையில் மாறாத அன்பு செலுத்தி வந்தாள். அவளிடம் உள்ள மதிப்பினால் அவள் வார்த்தைக்கு இரண்டு சொல்ல மாட்டான். விதவை நிலைமையில் மனந்தளராது இவ்வளவு பெரிய குடும்பத்தைக் காப்பாற்றிவந்த அவளுடைய மன உறுதியை இரத்த சம்பந்தத்தால் பெற்றுள்ளதோடு பிரத்தியக்ஷப் பிரமாணத்தாலும் கண்டறிந்து கொண்டான். கடைசியில் வாழ்க்கையில் எத்தனையோ பிழைகள் செய்திருந்தாலும் தனக்குமிஞ்சின வீரரில்லை என்று சொல்லும்படி யாகிவிட்டான்.

சில குறைகள்.

நமது நாட்டில் தன்னைத்தானே குறைத்துக் கொள்ளும் குணம் அதிகம் இருக்கிறது. நம் அன்னையரிடம் இக் குணம் இருந்துவந்ததே தற்காலத்தில் நமது தலைவரிடம் பெருங்குணமில்லா திருப்பதற்கு முக்கிய காரணமாகும் என்று சொல்வது மிகையாகாது. பள்ளிக்கூடத்தில் பிள்ளை இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்ததும் அவன் பெரியவன், அவனுக்குத் தாங்கள் யாதொரு புத்தியும் சொல்ல அருகமில்லை என நமது அன்னையர் நினைத்து விடுகிறார்கள். இது தவறு. சங்கராசாரியனே யானாலும் மகனுக்குத் தாய் பெரியவள், அவனுக்கு எப்பொழுதும் நற்போதனை செய்ய அவளுக்குப் பாத்தியமுண்டு. பாத்தியம் மாத்திரமில்லை, அது அவள்கடமை. மாதர் தம் சக்தியை நன்கு உணரவேண்டும். வன்மையும் வன்கண்ணும் மாத்திரம் அல்ல சக்திகள்; நினைத்துப் பார்த்தால் இவை கீழ்த்தரமான்சக்திகளே. அன்பும் நேயமும் ஸ்திரீகளின் உண்மையான சக்திகள். இவற்றைக்கொண்டன்றோ சகாதேவன் கண்ணபிரானைக் கட்டினான்!

சிறு பிராயத்தில் தாங்கள் சொல்லும் நல் வார்த்தைகளைப் பையன் கேட்காவிட்டால் அதற்காக மாதர் நம்பிக்கையையாவது பிடிவாதத்தையாவது விட்டுவிடக் கூடாது. தான்வளரும் இடத்தின் சுற்றுப்பக்க மெல்லாம் கற்பாறையாக இருக்கிறதே என்று செடியானது விதைகளைத் தனக்குள்ளேயே வைத்துக்கொண்டு விடுகிறதில்லை. அதுபாட்டுக்கு விதைகளை வாரி இறைத்த வண்

ணமாக இருக்கிறது. காலக்கிரமத்தில் சூரிய வெப்பமும் மழையும் பனியும் காற்றும் பட்டுப் பட்டு, கற்பாறையின் மேற்புறம் பொடியாகி வித்துகள் முளைக்கத்தக்க நிலமாகிவிடுகிறது. அதுபோலச் சிறுவயதில் நாம் போதிக்கும் போதனைகள் பையனுக்கு ஏறவில்லையே என்று அன்னையர் சும்மா இருந்துவிடக்கூடாது. இப்பொழுது சொல்லும் புத்தி வன்மையுடையதாக மாத்திரமிருந்தால், அது அன்போடும் ஆதரவோடும் சொல்லப்பட்டு வந்தால், முப்பது வருஷம் கழித்தாவது பயன்தரும். அத்தனை நாள் கிரமித்தாவது தன் மகன் நல்வழி திரும்பச்செய்யக்கூடிய வார்த்தைகளை இன்று தாய் சொல்லச் சோம்பலாமா?

கிறிஸ்தவ அடியார் வர்க்கத்தில் ஔகுஸ்தினன் என்ற ஒரு மகாநாதா இருந்தான். அவன் சிறு போழ்தில் மகா புத்திசாலியாக இருந்தான். ஆனால் அவனுடைய நடத்தை மிகத் துன்மார்க்கமானதாயிருந்தது. அவன் தாயான மோனிகா அவனுக்கு இத்தனைதான் என்றில்லை நற்போதனைகள் போதித்த வண்ணமாக இருப்பாள். ஆனால் அவை ஒன்றும் பயன்படவில்லை. ஆனாலும் அவள் அதோடு விட்டுவிடவில்லை. அவன் இருக்கும்போது அவனுடைய துர்நடத்தைகளால் வரும் தீங்குகளைக் கண்ணும் கண்ணீருமாய் நின்று எடுத்துக்காட்டுவாள். அவன் இல்லாதபோது அவனுடைய புத்தி நல்வழியில் திரும்ப வேண்டும் என்று கடவுளின் சன்னிதானத்தில் முறையிட்டுக் கொள்வாள். இங்ஙனம் செய்து வரவர அவனுடைய கல் மனமும் நெகிழ ஆரம்பித்தது. தன் தீய நடையைப்பற்றி அவனே துக்கப்பட ஆரம்பித்துக் கடைசியில், எல்லோரும் மெச்சத்தக்க மகா சுத்தனாகிவிட்டான். தாயாரின் அன்பினுக்கும் அன்பு காரணமாகப் பெருகும் கண்ணீருக்கும் அத்தனை சக்தி இருக்கிறது!

தனயரும் தாயரும்.

தம்முடைய மகன்கள் மூலமாய் எத்தனை அன்னைமார் இதிகாச சிரஞ்சீவித்துவம் அடைந்திருக்கிறார்கள்! அமெரிக்க ஜனத்தலைவனான ஆதாம்ஸ் என்பவன் ஒரு பெண்பாடசாலையில் பரிசளிக்கும் உற்சவத்தில் பேசியபோது தன் தாயைப்பற்றிப் பின்

வரும் வார்த்தைகள் சொன்னான். "நான் குழந்தையாயிருக்கையில், மனிதன் பெறக்கூடிய பேறுகள் அனைத்தினும் அனேகமாய் இதற்கு மேலானது ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய பேற்றை நான் பெற்றேன்; அதாவது மக்களுடைய குணங்களை நேர்வழியில் திருத்திவைக்கவேண்டும் என்கிற ஆவலையுடைய தாய் எனக்கு வாய்த்தாள். இந்த நீண்ட ஆயுள்காலத்தில் என்னிடம் தோன்றியுள்ள ஆஸ்திக புத்தியாகட்டும், தர்மப்பற்றாகட்டும், எல்லாம் அவளிடமே தான் நான் பெற்றேன். என் வாழ்நாள் பரிபூரண நன்மை நிறைந்ததாக இருந்திருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் நான் யாருடைய ஞாபகத்தைப் பக்தியோடு இன்னும் மனதை விட்டு அகலாது வைத்துக்கொண்டிருக்கிறேனோ அவள் விஷயத்தில் உண்மை பேசுவது அவசியமானதால் இதைச் சொல்லுவேன். இந்த என் வாழ்நாளில் என்ன என்ன தவறுகள் நேர்ந்திருக்கின்றனவோ, அவை எல்லாம் என்னுடைய குற்றமேயின்றி அவளுடைய போதனைகளின் குற்றமல்ல."

கத்தே என்று ஜெர்மனியில் போன நூற்றாண்டில் ஒரு பெரிய கவி இருந்தான். அவன் தாயாரை ஒருவன் பார்த்து வெகு நேரம் அவளோடு பேசிய பிறகு, 'கத்தே இப்பேர்ப்பட்ட மனிதனான காரணத்தை இப்பொழுது கண்டுகொண்டேன்' என்றானாம். பதினாயிரம் ரூபாய் பெறுமான ரவைக் கம்மல் இந்த வார்த்தைகள் அவளுக்குத் தந்த ஆனந்தத்தைத் தந்திருக்குமா?

உலாந்தாவில் ஆரிஷெப்பர் என்றொரு சித்திர நிபுணன் இருந்தான். அவன் சிறுவனாயிருக்கையில் அவன் தாய் அவனுடைய மனது சித்திரக்கலையில் செல்லும்படிசெய்ததோடு மிகவும் பாடுபட்டு அக்கலையை அவன் அப்பியசிக்கவேண்டிய பணமும் சேர்த்துச் சேர்த்து அனுப்பினாள். அவள் அவனுக்கு எழுதிய கடிதங்களுள் ஒன்றை அவனுடைய சரித்திரத்தை எழுதிய ஆசிரியை எடுத்துக் காட்டியிருக்கிறாள். அது தாய் மகனுக்குக் காட்டவேண்டிய அன்புக்கும் சொல்லவேண்டிய நற்போதனைக்கும் இலக்கியமாக இருத்தலால் அதை இங்கே மொழிபெயர்த்துக் காட்டல்வியர்த்தமாகாது. "உன் படத்தை

நான் முத்தமிடுகிறதையும் பிறகு மறுபடியும் அதை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, என் கண்ணில் நீர் ததும்ப, ‘என் ஆசைத் தங்கமே’ என்று நான் உன்னை அழைப்பதையும் உனக்குப் பார்க்க முடியுமானால், உன்னைக் கண்டிக்கும்போதும் உனக்கு வருத்த முண்டாகும்போதும் என் மனம் எப்படி உள்ளுக்குள்ளே துடிக்கும் என்று நீ அறிந்துகொள்ளுவாய்...ஊக்கத்தோடு வேலை செய். எல்லாவற்றிற்கும் மேலாக அடக்கத்தோடிரு. மற்றோருடைய வேலையை விட உன் வேலை உயர்ந்ததாயிருக்கும் போது, உன் வேலையைப் பிரகிருதியின் வேலையோடு ஒத்திட்டுப்பார். அல்லது உன் மனதிலுள்ள பாலியத்தோடு ஒத்திட்டுப்பார். அப்பொழுது இரண்டுக்கும் அந்தரம் வெகுதூரமாயிருக்குமாதலால் உனக்குக் கர்வமும் அகம்பாவமும் பிறக்காது.”

மிஷ்லே என்ற பிரெஞ்சுச் சரித்திராசிரியன் தன் தாயைப் பற்றி தான் எழுதிய ஓர் புஸ்தகத்தின் முகவுரையில் பின் வருமாறு எழுதுகிறான்:—“இதெல்லாம் எழுதுகையில் ஒரு ஸ்திரீயின் நினைவு எனக்கு வந்துகொண்டேயிருக்கிறது. சிரத்தையும் திடனும் நிறைந்த அவளுடைய மனது இந்த விவகாரத்தில் என் பக்கம் நின்று எனக்கு வலி தந்திருக்கும். நான் அவளை முப்பது வருஷங்களுக்கு முன்னே இழந்துவிட்டேன். அப்பொழுது நான் குழந்தை. இருப்பினும் அவளுடைய நினைவு என் மனதைவிட்டு அகலவேயில்லை. வயது செல்லச்செல்ல அவள் என்னோடு வந்துகொண்டேயிருக்கிறாள்.

“நான் ஏழையாயிருந்தபோது அவள் என்னோடு கஷ்டப்பட்டாள். எனக்கு நல்லகாலம் வந்தபோது அவளுடைய காலமாகிவிட்டது. சிறுவனாக இருக்கும்போது அவளுக்குப் பல விசாரங்களுக்குக் காரணமாயிருந்தேன். இப்பொழுது அவளை எங்ஙனம் தேற்றுவது? அவள் எலும்புகள் இருக்குமிடம் கூட எனக்குத் தெரியாது. அவளைப் புதைக்கக் கல்லறை வெட்டக் கூட என்னிடம் அப்பொழுது காசில்லை!

“இருப்பினும் நான் அவளுக்குக் கடமைப்பட்டுள்ளது அளந்து சொல்லமுடியாது. ஒரு ஸ்திரீயின் வயிற்றில் தான்

நான் பிறந்தேன் என்கிற உணர்ச்சி என் நெஞ்சில் ஆழமாக இருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும், என் எண்ணங்களிலும் என் குரலிலும் என் சாயலிலும் என் அபிநயங்களிலும் என் அன்னையையே நான் திரும்பப்பார்க்கிறேன். அவளுடைய இரத்தத்திலிருந்துதான் எனக்குப் புராதன யுகங்களின் மீது இத்துணை ஆர்வமும் இறந்து போனவர்களைப் பற்றி இத்துணை அன்பு நிறைந்த ஞாபகமும் வந்திருக்கிறது.

விருத்தாப்பிய தசை நெருங்கிக்கொண்டிருந்தும் நான் அப்பேர்ப்பட்ட தாயாருக்கு என்ன பிரதியுபகாரம் செய்யமுடியும். தாயர்களுக்கும் மாதர்களுக்கும் பரிந்துகொண்டு எழுதுகிறேன். இந்த நூல் அந் நன்றியறிதலைக் காட்டட்டும்.

முடிவுரை.

இப்படித் தன் புதல்வன் தன்னைப்பற்றி எழுதும்படி அவனிடம் அன்பு செலுத்தி அவனை மனிதனுக்கவேண்டும் என்கிற எண்ணம் நம் தாய்மாரின் மனத்தில் புகுவது அவசியம்.

இந்த நிமிஷம் பௌருஷமும், அஞ்சா நெஞ்சமும், எதற்கும் மனமழியாத மன உறுதியும், தன் மறுப்பும் நிறைந்த மனிதர் நம் நாட்டை ஈடேற்றுவதற்காகத் தேவையாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சிங்கங்களைத் தேசத்துக்காக உழைப்பதற்கென்று கொடுக்கும் பெருமை நமது பெண்மக்களின் தலைவாயிலில் காத்துக்கொண்டிருக்கிறது. சிங்கத்தின் வயிற்றில்தான் சிங்கப்பிள்ளைகள் பிறக்குமாதலால் இவர்கள் தங்களுடைய மனதில் வீரியம் நிரப்பிக்கொள்ளவேண்டிய தவசியம். குந்தி பிறந்ததும் நம் நாடன்றூ? சிவாஜியை வளர்த்த ஜிஜிபாயி நம்முடைய மகாராஷ்டிரத்துப் பெண் அல்லவா? குலோத்துங்கனைச் சோழ அரசைப் பிடித்துக்கொள்ளும்படி அடிக்கடி தூண்டி வந்து அவனுக்கு உற்சாகம் தந்தவள் அவன் தாயான அம்மங்காதேவி அல்லளா? ஆகையால் இவர்களுடைய சந்ததிகளான நமது தாய்மார்களிடம் தங்கள் மக்களை வீரர்களாக்கும் சக்தி சஞ்சிதமாகக் கட்டாயம் இருக்கிறது. மனம் வைத்தால் அந்தச் சக்தியை இவர்கள் வெளிப்படுத்த முடியும். இதை விடப் பெரிய

காரியமும் புகழும் தான் என்ன இருக்கிறது? வன்மையும் உறுதியு மற்ற இக்காலத்தில் பிறந்து, மற்ற நாட்டுப்பெண்டிருக்கு உள்ள கல்வி, சுதந்தரம் முதலிய சௌகரியங்கள் இல்லாதிருந்தும், தங்களுடைய மனோ நிச்சயத்தையே சாதனமாகக் கொண்டு, நாட்டைக் கைதூக்கிவிடக்கூடிய புருஷர்களை வளர்த்துத்தந்து விடுவார்களானால் உலகமே நமது பெண்டிரை மெச்சும், நம் நாடு அவர்களுக்கு அளவிறந்த நன்றி செலுத்தும், தேசம் தங்கள் மக்களாலும் தங்களாலும் அடையும் பெருமையை அவர்கள் கண்குளிரப்பார்ப்பார்கள். எல்லோரும் விரும்பும் இந்த அருங்காரியம் நிறைவேறுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!

உதய பூமியும் பாரத வருஷமும்.

1926-ம்௵ ஜூலை மாதத்திய "மாடர்ன் ரிவியூ" பத்திரிகையிலிருந்து 'அமுதன்' மொழிபெயர்த்தது.

நமது பாரத நாட்டிற்கு வடகிழக்கே, ஆசியாக் கண்டத்தின் கீழ்ப்பாகத்தில் 'ஜப்பான்' என்று ஒரு தேசமிருக்கிறது. அப்பெயருக்கு சூரியோதய பூமி யென்று பொருள். அது ஒருவித மஞ்சள் நிற மக்களால் குடியேறப்பட்டிருக்கிறது. அது 1,48,756 சதுரமைல் விஸ்தாரமும் 1923-ம்௵த்து ஜன சங்கையின்படி 6,00,00,000 ஜனத்தொகையு முடையது. இந்தியாவைப்போல ஆசியாக் கண்டத்தின் நடுநாயகமாக விளங்காமல் நிலத்தொடர்பே யின்றி கீழ்க்கோடியில் ஒதுங்கிவிட்டது. பாரத நாட்டைப்போல அத்தனை புராதன சரித்திரமும் அதற்கில்லை! அதன் சரித்திரப்பெருமை யெல்லாம் சமீப காலத்ததே. அதன் சரித்திரத்தின் பெரும்பாகம், பிற நாட்டாரோடு கலப்பின்றி ரிஷி ஆச்சிரமம்போல அது விளங்கியிருந்ததென்று சொல்கிறது. சுமார் எழுபது வருஷங்களுக்கு முன்பாக 'பெர்ரி" என்னும்

அமெரிக்கமாலுமி அதன் ஏகாந்தத்தைக்குலைத்து அயல் நாட்டு வியாபாரத்துக்கு அதன் கதவுகளைத் திறந்து வைத்த வரையில் ஆசியாக் கண்டத்திலே பெரும்பாலும், உலகத்திலே சிறிதும் அதன் பேரே கேள்விப்படாமலிருந்தது. அதிலுள்ள சிற்றிலக்கியங்களும் உலகத்திற்குத் தெரியாமலிருந்தன. தன் சமயத்தை இந்தியாவிலும், கலைச்சிற்பத்தை விசேஷப் பெருமையுடையதாயிருந்தாலுங்கூட சீனத்திலும் இரவலாகப் பெற்றுக்கொண்டது. தொழிற் சாலைகளும் அயல் நாட்டு வியாபாரமுமின்றி, பெரும்பாலும் விவசாய பூமியாகவே விளங்கியது. இரும்பும் மற்றவுலோகங்களும் இல்லாமல், சிறிதளவே நிலக்கரிக் கனிகளைப் பெற்றிருந்தது. பொருட் செல்வத்திலும் புராதன இந்தியாவுக்கு மிகவும் குறைந்தேயிருந்தது. இச்சிறியநாடு, கீழ்நாட்டாருக்குத் தங்கள் நாட்டை ஆளத் தெரியாதென்று சொல்கிற அபவாதத்தைப் பொய்யாக்குகிறது. இன்றைக்கு, வியாபாரத்துறையிலாகட்டும், இராணுவ பலத்திலாகட்டும், ஐரோப்பிய வல்லரசுகளுக்கு ஒரு சிறிதும் இளைத்ததாக இல்லை.

இந்தியாவோ, 17,66,597 சதுரமைல் விஸ்தாரமும் 1921-ம் வருஷத்து சங்கையின்படி 31,89,40,000 ஜனத்தொகையுமுடையது. இந்நாட்டிற்கு இருநூறு வருஷ காலமாக மேல்நாட்டாருடைய கூட்டுறவு கிடைத்திருக்கிறது. உதய நாட்டைப் போல நாகரீகத்தில் இளமையுடையதில்லை. சரித்திர ஆராய்ச்சிக்கு எட்டாத காலமுதலே மகோன்னத நாகரீகத்தைப்பெற்று யவனரோடும் உரோம நாட்டாரோடும் வாணிபம் செய்துகொண்டிருந்தது. ழே ஐரோப்பாவில் இருபத்திரண்டு நூற்றாண்டுகளுக்கு முன், அரசாண்டிருந்த மகா அலெக்சாந்தரென்னும் கிரேக்க சக்கரவர்த்தியின் கண்ணைக்கவர்ந்து, அவனுடைய வீரப் படைகளுக்கு ஏற்ற போர்க்களமாக விளங்கியது. ஏறக்குறைய இதே காலத்தில் இந்நாட்டிற் பிறந்த பௌத்த சமயம் இந்நாட்டாரால் மேல்நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆசியாக் கண்டம் முழுவதும் வியாபித்து, ஐரோப்பாவின் கீழ்பாரிசம் வரை எட்டியிருந்தது. மத்தியதரைக் கடலின் துறைமுகங்களாகிற வெனீஸ், ஜினோவா முதலான நகரங்களின் செல்வப்பெருக்கெல்லாம், இந்தியாவோடு செய்த கப்பல் வியாபாரத்

தாலே கட்டப்பட்டிருந்தது. இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாக, மத்தியதரைக் கடல் பிரதேசங்களுக்கும் இந்தியாவுக்கும் இடைவிடாமல் வியாபாரக் கப்பல்கள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. கடல் வழியாக இந்தியாவுக்குப் பாதை கண்டுபிடிக்கவே, ஐரோப்பிய மாலுமிகள் ஏராளமாகப் படைதிரண்டு வந்தனர். கொலம்பஸ் தடுமாறி அமெரிக்காவை இந்தியாவென்று நினைத்து அதன் குடிகளை இந்தியரென்றழைத்தார். கடைசியாகப் பதினைந்தாம் நூற்றாண்டில், வாஸ்கோடி காமா ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சுற்றி இந்தியாவுக்கு வரும் வழி கண்டுபிடித்ததும், ஐரோப்பியக் கடலோடி ஜாதியாரெல்லாம் இந்திய வியாபாரத்தைப் பங்கிடத் தலைப்பட்டனர். போர்த்துகேசியர், ஸ்பானியர், டச்சுக்காரர், பிரெஞ்சு நாட்டார், பிரிட்டிஷ்காரரெல்லாம் இந்தியாவின் ஆதிபத்தியத்துக்காகப் போர் செய்யத்தொடங்கினர் கடைசியாக மற்ற நாட்டார்களையோட்டி ஆங்கிலேயர் வெற்றி பெற்றதும், இந்தியாவில் வியாபார வியாஜகமாகத் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி மெல்ல மெல்ல அரசியலைக் கைப்பற்றிக்கொண்டதும், உலகம் அறிந்த விஷயம். இவர்களுக்கு இந்திய காமதேனு கிடைக்கவே, மற்றைய மேல் நாட்டார்களுக்கு இவரிடம் பொறாமை அதிகரித்தது. இப்படிச் சரித்திர மெட்டு மட்டும் நாகரீகம் பெற்று விளங்கிய நாடு இப்பொழுதேன் க்ஷீணித்து விட்டது? இதற்கு எவ்வளவோ சிறிய உதய பூமி, சகல வளமும் பெற்று ஆசியாக் கண்டத்தில் முதன்மையும், உலகத்தில் முன்னணியும் பெற்று விளங்குவதேன்? இந்தியர் ஜப்பானியருக்குத் தாழ்ந்தவரா? இப்பொழுது சில துறையில் தாழ்ந்தவர்களாகக் காணப்பட்டாலும், ஜப்பான் நாகரீகமடையத் துவக்கிய காலத்தில் இந்நாட்டார் அவர்களுக்கு இளைத்தவரா? கீழ் நாட்டாரோடு பெரிதும் பழக்கமுள்ள ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இவ் வினவுக்கு ஒரே விடைதான் அளித்திருக்கின்றனர். அது ‘நாகரீகத்திலும் அறிவுத் திறமையிலும் ஒழுக்கத்திலும் பாரத நாடு உதய பூமிக்குப் பெரிதும் உயர்ந்த’ தென்பதே.

ஆயின், இவ்விரு நாடுகளுள்ளும் இவ்வளவு வேற்றுமை ஏற்படக் காரணமென்ன? ஒன்று உயர்வுக்கும் மற்

ளென்று தாழ்வுக்கும் வரம்பாக விளங்குவதேன்? கற்றவர்களெல்லாம் இதற்கு ஒரே காரணந்தான் கூறமுடியும். உதயபூமி இன்றளவும் சுதந்தரம் பெற்று விளங்குகிறது. பாரதமோ இரு நூறுண்டுகளாக ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. அன்றியும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் கல்வி. அதன் குறைவு, அந் நாட்டின் பிற்போக்குக்கும் அழிவுக்கும் காரணமாகும். இவ்விஷயத்தில் இவ்விரு நாடுகளும் எப்படி நடந்துகொண்டன வென்று கவனிப்போம். உதயபூமி தனது கோஷாவினின்றும் வெளியேறி அயல் நாட்டாரோடு அளவளாவத் தொடங்கியதும். துரைத்தனம் தன் ஜனங்கள் முழுமைக்கும் கல்வி அவசிய மென்பதை உணர்ந்தது. கி. பி. 1869லேயே கீழ்க்கண்ட விதி செய்தது. அது "எல்லா வகுப்பாருக்கும் கல்வி அவசியம். முற்காலத்தில் உத்தியோகத்துக்கே அவசியமென்று கருதப்பட்ட கல்வி, இனிமேல் வகுப்பு, பால் வேற்றுமைக ளின்றி எல்லோருக்கும் அவசிய மாகிறது. ஒரு கிராமத்திலாவது, ஒரு வீட்டிலாவது, படியாத ஒருவனும் இருக்கக்கூடாது" என்பதாம். இவ்விதியை அனுசரித்து ஆரம்ப நடுத்தர உயர்தரக் கலாசாலைகளும், சர்வகலா சங்கங்களும் ஏற்பட்டன. விவசாயம், கைதொழில், சிற்பவேலைகள் சம்பந்தமான கல்வி விசேஷமாகப் பயிற்சி செய்யப்பட்டது. துரைத்தனத்தார் இன்றியமையாத தென்றறிந்த இத் தொழிற் கல்விக்காக, அமெரிக்க ஐரோப்பியத் தலைநகரங்களின் கலாசாலைகளுக்கும், சர்வகலா சங்கங்களுக்கும், விவசாய கைத்தொழிற் சிற்பப் பயிற்சிச் சாலைகளுக்கும், சிறுவர்கள் ஏராளமாக அனுப்பப்பட்டனர். அங்ஙனம் கற்றுத்தேர்ந்த சிறுவர்கள், தம் கல்வியொழுக்கங்களைத் தம் நாட்டிற் போதித்துத் தலைவர்களாகவும் ஆசிரியர்களாகவும் அமரவேண்டுமென்பதே துரைத்தனத்தார் நோக்கமாக விருந்தது. இந்தியாவிலோ, இதற்கு நேர் விரோதமான கொள்கை கையாளப்பட்டு வந்தது. அந்நிய அரசாங்கமாகையால், ஜனங்கள் வெகுவாகப் படித்துவிட்டால் எங்கே தமது ஆட்சியை வெறுப்பார்களோ வென்று, நமது அரசாங்கம் கல்வியில் பயங்கொண்டது. சிலகாலத்துக் கெல்லாம் சிறிது கல்வி கற்பிக்கப்பட்டு வந்ததாயினும், அது குறுகிய வரம்புடை

யதாயிருந்தது. குடிகளில் மிகச்சிறு பகுதியினருக்கே எட்டியது. உயர்தரக் கல்வியோ நமது ஆங்கிலேய அரசருக்குச் சேவிக்க நமது இளைஞரை உருப்படுத்தவே உபயோகப்பட்டது. கலை ஞானங்கள் கைத்தொழில்கள் சம்பந்தமான கல்வியும், நமது நாட்டின வாணிபத் துறையை வளம் படுத்திப் பொருட் செல்வத்தைப் பெருக்கி, உலகத்திலே பற்பல நாட்டாரோடும் நம்மவரை அளவளாவச் செய்து, தேசசேவை யாகிற உத்தம கைங்கரியத்துக்கு நம் சிறுவர்களையும் சிறுமிகளையும் தகுதியடையச் செய்யும் பலதிறப்பட்ட கல்வித்துறைகளும், புறக்கணிக்கப்பட்டோ முற்றிலும் மறக்கப்பட்டோவந்தன. அயல் நாட்டுக்குக் கல்வி யபிவிர்த்திக்காகச் செல்லும் நம் மாணவர்களுக்கு எவ்வளவு இடையூறு செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்து, அவர்களுக்கு அனுதர வளித்து வந்தது. ஏனெனில், அமெரிக்காவிலுள்ள சுதந்தரமும் ஜனநாயக உணர்ச்சியும் எங்கே நமது வாலிபர் மனத்தை மாற்றி விடுமோ என்று இவ் வந்நிய அரசாங்கம் பயந்தது.

இதற்குச் சான்றாக இருபெரும் புலவர்களின் உரைகளைக் காட்டுகிறேன். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலே, ஐயோவா சர்வகலாசாலையில் போதகாசிரியராயிருக்கும் சுதீந்திர வசு என்னும் பெரியார், 1920-ம்௵ ஆகஸ்டு மாதம் வெளியான 'பொது மன்றம்' என்னும் பத்திரிகையில், பின்வருமாறு எழுதியிருக்கிறார்:- "தொழிற் கல்வியும், விவசாயப் போதனையும் ஒரு நாட்டின பொருளாதார விருத்திக்கு மிகவும் அவசியமாயினும், இவற்றை இந்தியாவில் ஏற்படுத்தப் போதுமான வசதிகள் அளிக்கப்படவில்லை. ஜப்பானைப்போல இந்தியாவும் சுயராஜ்யம் அடைந்திருந்தால், இந் நாட்டின் நிலை இப்பொழுது முற்றிலும் வேறாக இருக்கும். அறுபது வருஷத்துக்கு முன், ஜப்பானின் நிலைமையும் இதே மாதிரியாகத்தானிருந்தது. அயல் நாட்டு வியாபாரத்தில் வெறுப்புக்கொண்டு, கேவலம் விவசாய பூமியாகவே விளங்கியது. அந் நாட்டின் நிலையும், இப்பொழுதைய இந்தியாவைப்போல, பல ஜாதியாகவும் பற்பல உட்பிரிவுகளாகவும் பிரிந்து போர்வீரராகிய "சாமரை" யென்னும் ஜாதியார் ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கிறது. பெர்ரி யென்னும்

மானுமிவந்ததும், ஜப்பான் நிலை முற்றிலும் மாறிவிட்டது. கீழ் நாட்டில் கைத்தொழிலில் தலைசிறந்த ஜாதியாராகத் தங்கள் நாட்டார் விளங்கவேண்டுமென்று, ஜப்பானியத்துரைத்தனத்தாரும் துணிவு கொண்டார்கள். அதற்கு என்ன ஏற்பாடு செய்தனர்? நவீனக் கைத்தொழில் முறைகளிற் போதிய அறிவும், அனுபோகமும் இந் நாட்டாருக்கில்லை. கைத்தொழில் அமைப்புக்கு முன்மாதிரிகளும், துணைக்கருவியாகிய செல்வமும், இவர்களிடம் இல்லை. இந்த நிலைமையில், துரைத்தனத்தார் புகுந்தார்கள். பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்தி, பல துறைப்பட்ட தொழில்களையும் கற்றுக்கொடுத்தனர்.'' கிகுஷி யென்னும் ஜப்பானிய பிரபு, பின்வருமாறு சொல்கிறார்:- "பட்டு நெசவு, சாந்து தயாரித்தல், பருத்தி பட்டு நூல்நூற்றல், செங்கற் சுடுதல், அச்சு, புத்தகங் கட்டுதல், சவுக்காரஞ்செய்தல், கையச்சு வார்த்தல், பானைசட்டி அலங்காரம் முதலிய தொழில்களை யெல்லாம் துரைத்தனத்தார் ஆராய்ச்சி செய்தார்கள். இக் கைத்தொழில்களில் ஜனங்களுக்கு ஊக்கமளிக்க அரசாங்கத்தார் பொருட்காட்சிச்சாலைகளைத் திறந்து வைத்தார்கள். அந்நாட்டின் இயற்கைப்பொருள்களும், செயற்கைப்பொருள்களும், அரசாங்கத்தார் மேற்பார்வையில் வெளிநாட்டுப் பொருட்காட்சி விழாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஜப்பானியத் தொழிலாளர் வேலைகளை அந்நிய நாடுகளில் பரப்பவேண்டுமென்னும் நோக்கத்துடன், ஒரு வியாபாரக்கூட்டத்தாரைத் துரைத்தனத்தார் நியமித்தார்கள். பெண்மக்களுக்குத் தொழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன, பெண்களை ஊழியர்களாக்கிக் கொள்ள, அரசாங்கப் பிரசுராலயமே வழி காட்டியது. இச் சிறு தொடக்கமே, பின்னால் மிகுதியும் பெருக்கமடைந்து விட்டது. சுருங்கச் சொல்லின் அரசாங்கத்தார் நாட்டு ஜனங்களைக் கைத்தொழில் முகமாகத் திருப்பிவிட்டு, வெற்றி கண்ணுக்குப் புலப்பட்டதும் நாட்டின் குறைகளுக்கு இன்றியமையாத கைத்தொழில்களை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றைத்தொழில்களைத் தங்கள் வசத்தினின்றும் பொதுஜனங்களின் பொறுப்புக்கு விட்டுவிட்டார்கள்.'' இவற்றின் பலனாக மிஜியப்தம் 1867-ல் ஜப்பானில் கைத்தொழில் என்று புகழ்ந்து சொல்லும்படியான நிலைமையில் யாதொன்றும் இல்லாதிருந்தபோதிலும்,

முப்பது வருஷத்தில் இருபதுகோடி டாலர்களை மூலதனமாகவுடைய சுமார் 4595 வியாபாரக் கைத்தொழிற் சங்கங்கள் இதில் கிளைத்துவிட்டன. இன்று, இந்நாட்டில் வியாபார சங்கங்களும், அவற்றின் மூலதனமும், இன்னும் எத்தனையோமடங்கு பெருகிவிட்டன.'' ஆசியாக் கண்டத்துக்கைத்தொழில் நாடுகளில் ஜப்பான் முதன்மை பெற்றிருப்பது இப்பொழுது ஆச்சரியத்தைத் தருகிறதா? இன்னும், ரவீந்தரநாத் டாகூர் பின்வருமாறு கூறுகிறார்:- "ஜப்பானியர் மிகுந்த அபிவிருத்தி யடைந்திருக்கின்றனர். சம வசதிகளிருந்தால், இந்தியாவும் இதே முன்னேற்றத்தை யடைந்திருக்கும். நாம் ஜப்பானியருக்கு அறிவில் குறைந்தவர்களல்லோம். சில தொழில்களில் தாழ்ந்தவர்களேனும், சுயம்புவான கருத்துலகில் உயர்ந்தவர்களே. அவர்கள் தேர்ச்சியடைந்திருக்கும் தொழிலில்களில் கூட ஒருகாலத்தில் அவர்களுக்கு சமமாக விருந்தோம். இடையூறுக ளில்லாவிட்டால், இன்னும் அப்படியே யிருப்போம். கல்வி யபிவிருத்தியிலும், அறிவு வேட்டையில் தமதிளைஞர்களை அயல் நாடுகளுக்கனுப்புவதிலும் ஜப்பானியருக்கு சுதந்திர மிருந்தது. இங்கிலாந்தோ, தன்னலம் பேணி நம்மைப் பலவீனராகவும் அறிவீனராகவும் வைத்திருக்கிறதென்பதையும், ஆராய்ச்சிச் சாலைகளில் நம்மவர் கலைகளில் தேர்ச்சி யடைவதையும், நூதன முறைகளைக் கண்டுபிடிப்பதையும், வெறுக்கிறதென்பதையும் ஒவ்வொரு இந்தியனும் உணர்வதோடு, இத்துறையை நடுவு நிலையாக ஆராயும் எவனும் வெளிப்படையாக ஒப்புக்கொள்வான்.''

(தொடரும்)

* * *

இயற்கை வாழ்வின் இன்பம்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது.)

நமது உடல் பஞ்சபூதங்களால் ஆனது. ஊர்வன, நடப்பன, பறப்பன, செயற்கொண்டிருப்பன முதல், தேகமுள்ள எல்லா உயிரினங்களும் பஞ்ச பூத விகாரமேயாகும். பூதங்கள்

ஒன்றினின்றொன்று பிறந்து முடிவில் உயிர்வகைப் பொருள்களின் உற்பத்திக்குக்காரணமானதை தைத்திரிய உபநிடதத்தில் ஆனந்தவல்லியில் அடியில்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

> "ஆகா ஸாத் வாயு: வாயோ ரக்னி:
> அக்னிர் ஆப: அப்ய: பிரதிவி:
> ப்ரதிவ்யா ஒஷதய: ஒஷதீப்யோன்னம:
> அன்னாத் புருஷ:"

ஆகாயத்தினின்று காற்றும், காற்றினின்று தீயும்; தீயினின்று நீரும், நீரினின்று பூமியும், பூமியினின்று செடிகொடிகளும், செடிகொடிகளினின்று உணவும், உணவினின்று பிராணியும், உண்டாயிற்றென்பதே அதன் பொருள். பிருகுவல்லியில்,

> "அன்னம் ப்ரஹ்மே திவ்யஜானா
> அன்னாஹ்யேவ கலவிமான் பூதாநி ஜாயந்தே."

என்றுசொல்லப் பட்டுள்ளது. அந்த அன்னத்தை அதன் தாயான பஞ்சபூத சுத்தத்துடன் துய்த்து வாழ்வது மக்கள் அறம் என்பது தெரிகிறது. ஆகாயம், காற்று, தீ, நீர், பூமி இவற்றைப் பயன்படுத்தித் தூயவாழ்வு வாழ்வதே இயற்கை வாழ்வு எனப்படும். இவற்றால் உண்டாகும் தாவரங்களை அதன் தன்மைகள் மாறாது புசிப்பதே இயற்கை யுண்டியாகும். இயற்கை வாழ்வு வாழ்பவனுக்குத் தன் பஞ்சபூத விகாரமான உடல் உறுதிபெறும். தூலவுடலின் பரிசுத்தத்தால் சூக்கும வுடலும் சுத்தமாகும். நரம்புகள் திண்மையுறும். அதனால் மூளை சக்தி பெறும். அதனால் மனமும் திண்மையுறும். திண்ணிய மனத்தால் எண்ணிய தெய்தும். ஆதலின் இயற்கை வாழ்வே மெய்த்தவம், அதுவே காயசித்தி, அதுவே சுகவாழ்வு.

> "இயற்கையின் புத்தகமே இன்பாக நோக்கின்
> பயக்கும் அறனும் பயன்"

என்றபடி இயற்கையோடு இயைந்து அதனுடன் அடுத்துப்பழகி வந்தால் மனிதன் தன் வாழ்வில் அடையவேண்டிய பயனை யெல்லாம் அடையலாம். இயற்கையன்னை எத்தனை பெரியோருக்கு விளங்கியிருக்கிறாள். தபோவனங்களில் நமது மஹரிஷிகளை

யும், மாணவரையும் வீரர்களையும் வளர்த்தது இயற்கையன்னை யன்றோ? இந்த இயற்கை யன்னை யன்றோ முகம்மதுவுக்குத் திருக்குரானை ஈந்தது? சூரியனும், சந்திரனும், வானும் புலனுமன்றோ நபி நாயகத்தின் புத்தகங்களாயின! அவையன்றோ அவருக்கு தெய்வீக உண்மைகளைக் காதில் ஒலித்தன! பேரின்பந் துய்க்கப் பெருந்தவம் முயலும் பெரியோர்கள் எதன் உறவினால் அதை அடைகின்றனர்? இயற்கையின் இன்பங்கள் சிறந்து விளங்கும் தபோவனங்களின் தனிமையினாலன்றோ! நமது வேதஙகளெல்லாம் இயற்கை வனங்களின் எதிரொலிகளன்றோ! இதனாலன்றோ ஸ்ரீபர்த்திருஹரி யோகீஸ்வரர் தனது வைராக்கிய சதகத்தில் ஒரு அழகான பாட்டால் இயற்கையுடன் உறவு கொண்டாடுகிறார். அப்பாட்டு இளமை முதல் எனது ஆவியில் பதிந்துள்ளது. அதனை நேயர்களும் அறியும்பொருட்டு அடியில் எழுதுகிறேன்:–

“ மாதர் மேதினி தாதமாருதஸகே
தேஜஸ் ஜுபந்தோஜல் ப்ராதவ்யோம்
நிபத்த ஒஷபவதாம் அந்த்யப்ரணமாஞ்சன!
யுஷ்மத்ஸங்க வசோட ஜர்தஜுக்ருத
ஸ்பாரஸ்புரன நிர்மல ஞானபாஸ்த
ஸமஸ்த மோஹ மஹிமா லீயே பரப்ராமஹணி.”

இதன்பொருளாவது:-“பூமியென்றதாயே, வாயுவானதந்தையே, ஒளியென்னுந் தோழனே, நல்லுறவான தண்ணீரே, கூடப்பிறந்தவனான ஆகாயமே இதோ எனது இறுதி வணக்கத்தை உங்களுக்குச் செய்கிறேன். உங்களுடன் உறவாடினேன். அதன் பயனாக நற்குணங்கள் பல வந்தன. அந்த நற்குணங்களால்மனந் தெளிந்தேன். மனத்தெளிவினால் சுத்தஞானம் பிறந்தது. அந்த சுத்த ஞானத்தால் எல்லா மயக்கங்களையும் ஒழித்தேன். மயக்கமொழிந்து இதோ பரம்பொருளுடன் சேருகிறேன்.”

பர்த்திரு ஹரியாருக்கு ஆத்ம விடுதலையடைந்து பரம்பொருளுடன் ஒன்றுவதற்கு (ஈரறக்கலப்பதற்கு) இயற்கையே வழிகாட்டியா யிருந்ததெனில் இயற்கை நமது ஆன்மாவையும்; யாக்கையையும், (தூல சூக்கும சரீரங்களை) வளர்க்கும் அன்புள்ள அன்னை யென்பதில் ஐயமுளதோ! இயற்கை வாழ்வினால்

தூய்மையுற்ற பெரியோர்களுக்கு இயற்கையே கடவுளைக் காட்டுகிறது. கல்லாக் கல்வியைக் கற்று பிறந்தது முதல் திருப்புளிமரப்பொந்திற் குடியிருந்து இயற்கை வாழ்வு வாழ்ந்த நமது நம்மாழ்வார் இயற்கை யற்புதங்கள் அனைத்திலும் ஆண்டவனைக் கண்டு உருகும் பாசுரங்களைக் கேட்டு உருகாதாரும் உளரோ?

“கரும் பெரு மேகங்கள் காணின்
கண்ணனென்றே பறக்கும்,
பெரும் புல வானிறை காணின்
பிரானுள னென்று பின் செல்லும்.”
“ஒன்றிய திங்களைக் காணின்
ஒளிதிகழ் வண்ணனே என்னும்
நின்று பெய்யும் மழை காணின்
நெடு மாலே வாவென்று கூவும்,”

என்று மேகத்திலும் புலன்களில் மேயும் பசுக் கூட்டங்களிலும், நம்மாழ்வார் திருமாலைக் கண்டு களித்தார். அரசர்கள் தங்கள் ராஜபோகத்தை யெல்லாம் விட்டுவிட்டுக் காட்டுக்குச் சென்றது இயற்கைவாழ்வில் அவர்களுக்குஇருந்த ஆர்வத்தினாலன்றோ! அதிகாரமும், செல்வாக்கும், அரசாட்சியும், அரம்பையர் போகமும், திருவையர் சேவையும் தெவிட்டா விருந்தும் உள்ள ராஜபோகத்தை ஏன் மன்னர் துறக்கின்றனர்?

கச்சையங் கடற்கரி கழுத்தின் மேலுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு முங்நிழல்
நிச்சய மென்று நான் நெடிது நாளுண்ட
எச்சிலை நுகர்வதும் இன்பமாகுமோ?

என்று தசரதன் போகவாழ்வை (செயற்கைவாழ்வை), மாளிகை வாழ்வை எச்சிலென்ன உதறித்தள்ளி,

“விட்டவரல்லரேல் யாவர் வீடுளார்?” என்று எண்ணுவானேன்?

புத்தர்பிரான் தன்னைச்சூழ்ந்த போகக்கடலைத் துறவென்னுந் தோணியாற் கடந்து கானகஞ் செல்வானேன்? இயற்கை யன்னையின் அன்பன்றோ அவர்களுக்கு இன்பைத்தந்தது. இயற்கையழகை நுகருவோருக்கு இவ்வுலகே பெரியவீடு.

'பூ வணை யாகி வானம்
பொருந்துமேற் கட்டியாகித்
தீவம தாகி யிந்து
செவ்வொளி வீசுங்காற்று
மேவுசா மரமதாகி
விடுதலை மனைவியாகிக்
கேவலம் இன்பமாகிக்
கிளர்ச்சியாய் நின்றான் வேந்தன்'

என்று "ராஜன் துறவில்" இயற்கை வாழ்வை யணைந்த ஒரு அரசனின் இன்பத்தை அழகாகப் பாடியிருக்கிறது. அம்மன்னனுக்கு பூமியே மெத்தையானது. வானமே மேற்கட்டியானது. சந்திரனே தீபமானது, காற்றே சாமரமானது. தனிமையே மனைவியானது. பேரின்பமே இன்பமானது. தன் அரண்மனையில்தான் அனுபவித்த போக இன்பத்தினும் இந்த இயற்கை போக இன்பத்தில் அம்மன்னன் பன்மடங்கு மிக்கக் கிளர்ச்சியானான். இயற்கையில் இன்புறுந் தூயருக்கு மனிதர் மட்டும்உறவல்ல. பட்சிகளும் மிருகங்களும் அவருக்குச் சுற்றத்தாராகும். அவர்களுக்கு எல்லாம் அழகுமயமாக, கடவுள் மயமாகத்தோன்றும்.

"எல்லா வுயிருள்ளும் ஈசனையே கண்டுவப்போன்
நில்லா நெறி யொன்று மில்"

என்றபடி அவர்கள் அனைத்திலும் ஆண்டவனைக் கண்டு அகங்களிப்பர்? அவர்கள் இன்பமே இன்பம். செயின்ட் பிரான்ஸிஸ் (St Francis of Assasie) என்னும் இத்தாலியத் துறவி இவ்வின்பத்தை நுகர்ந்த விதத்தை அறிவோம். அவ்வரிய துறவி, தன் தந்தை கொடுத்த சட்டைகளை யெல்லாம் உதறிவிட்டு வீட்டின் பந்தத்தை விடுத்துக் காட்டை அண்டினர். இயற்கை யன்னை அவருக்கு அன்பை உபதேசித்தாள். அது முதல் நமது பிரான்ஸிஸ் பட்சிகளுடன் உறவாடினார். அவைகளை இன்பமாகக் கொஞ்சிப் பாடினார். காற்றையும் கதிரையும் சகோதர பாவத்தோடு நேசித்தார். அவர் லத்தீன் பாஷையில் பாடியுள்ளதன் சாரத்தைச் சிறிது ஈண்டு தமிழில் பாடுவோம்:-

(1)

நீல விதான மொளிர் ஞாயிறிலும்—வெள்ளை
நித்திலத்தைப் போன்ற மதி நிலவினிலும்
ஓலமிட் டழைத்திடும் உவரியிலும்—என்றன்
உள்ளத்தினை யள்ளு முவப் புள்ளதுவே!

(2)

காட்டு மரங்களெல்லாம் கனி தரவே—தென்றற்
காற்றமைதி யோடுகளிப் பூட்டிடவே!
பாட்டினிய பல நிறப் பட்சிகளே—வெகு
பட்சமுடன் இன்சொல்லுடன் பக்க—முலவ!

(3)

மழையுடன் நிலமகள் மன்றல் புரிய—நல்ல
வளங்கள் விருந்தளிக்க குலங்களுக்கே,
அழைத்துறவாடி நிற்கும் இயற்கை யன்னை—யெனக்
கானந்தத் துணைவர்கள் அவனி யெல்லாம்!

பிரான்ஸிஸ் முனிவன் உடுத்தது கந்தை, உண்டதுபிச்சை. மனத்தைச் சுதந்திரப்படுத்தி இயற்கை வாழ்வு வாழ்ந்ததினால் தான் அம் முனிவன் பெருங் களிப் பெய்தினன். இயற்கையில் உலவ உலவ இன்பம். இயற்கையை விடுத்து ஒளிய ஒளிய துன்பம். இயற்கை வழியினின்று நாம் விலகும் ஒவ்வொரு தடவையும் நோய் அனுபவிக்கிறோம். நமது உணவும், உடையும், வாசமும், பழக்கங்களும் இயற்கைக்கு மாறாக இருப்பதினால் விளையுங் கேடுகளே உலகிலுள்ள நோய்களுக்கும் துயர்களுக்கும் காரணம். நாம் வழிதப்பிப்போகும்போது நம்மைத் தண்டித்து சரியானவழியில் திருப்பவே நோய் பிறக்கிறது. அது இயற்கையன்னையின் தண்டனை. நாம் அளவிற்கு மிகுதியாகவும் அசுத்தமாகவும் உண்டால் உடனே நம்மைக் கண்டிக்க இயற்கையன்னை தயாராயிருக்கிறாள்.

நமது பழைய பழக்க வொழுக்கங்கள் இயற்கை வழிகளை யொட்டியே யிருந்ததனால்தான் நமது முன்னோர்கள் நம்மை விடப் பன்மடங்கு பலமுள்ளவராயிருந்தனர். அக் காலத்தில் மாணவர் பயின்றது இயற்கை வனங்களே. மாதவர் பயின்றதும்

ஆண்டே. ஸ்நாநம், சூரியநமஸ்காரம், விரதம், உபவாசம், கண் விழிப்பு முதலியவற்றில் முற்றும் இயற்கை விதிகளையொட்டியே நமது முன்னோர்கள் நடந்தனர். பாகவதத்தில் கோகுல நந்தகோபருடைய வாழ்க்கை எவ்வளவு களிப்பைத் தருகின்றது. யமுனை நதிக்கரையிலும், வனங்களிலும், கோவர்த்தனக் கிரியிலும், கோபிகள் கண்ணனுக்காக உலவுங் காட்சி எவ்வளவு இனிமை! வனபோஜனங்கள் செய்வதும், அரசர் அடிக்கடி காடு செல்வதும், மாணவர் வனங்களில் குருகுலவாசஞ் செய்வதும், மலைகளின்மீது கோவில்கள் அமைப்பதும், தீர்த்தயாத்திரைகள் செய்வதும், சூரியன், வாயு, வருணன், அக்னி முதலியவற்றை வணங்குவதும் நமது பாரதஜாதிக்கு இயற்கை வாழ்விலுள்ள இன்பத்தை விளக்குகிறது. இயற்கை வாழ்விலுள்ள இன்பத்தையும் செயற்கை வாழ்விலுள்ள துன்பத்தையும் ஸ்ரீ பர்த்திருஹரி யோகி அடியிற்கண்ட கருத்துடையபாட்டால் வெளியிடுகிறார்:-

‘‘தேசந்தேசமாக, கோட்டை கோட்டையாக அலைந்தேன். ஒரு பயனுமில்லை. ஜாதி, குலாபிமானத்தையெல்லாம் விட்டு ராஜசேவகஞ் செய்தேன். அதுவும் நிஷ்பலனானது. காக்கை போல வீட்டுக்குவீடு நுழைந்து உண்டேன். இன்னும் ஆசையே, நீ அடங்கவில்லையே!

‘‘துக்கத்திற்குக் காரணமான சிறு பொருள்படைத்த பெரும் மமதையுள்ள புருவந்துடிக்கும் பணக்காரரிடம் என் சென்று எங்குகிறாய்? காட்டிலுள்ள கந்தமூலங்களைப் பிரளயம் அடித்துக் கொண்டு போயிற்றா? உண்பதற்கு அவை யில்லையா? குடிப்பதற்குத் தெளிந்த மலையருவிகள் இல்லையா? உடுப்பதற்கு மரவுரிகள் இல்லையா? வசிக்க மலைக்குகைகளில்லையா?’’

தற்போது உலகம் மெள்ள மெள்ள விழித்து இயற்கை வழக்கங்களைக்கைக்கொள்ள முயன்றுவருகிறது. ஜலவைத்தியம் சூரியஸ்நாநம், உபவாசம் இயற்கையுணவு முதலியவை பல இயற்கையாளரால் கைக்கொண்டுவரப்பட்டு வருகின்றன. மேல்நாடுகள் இவ்வழியில் நாளுக்கு நாள் புது முறைகள் கண்டுபிடித்துப் பழகி வருகின்றன.

இயற்கைநெறிகள் பலருக்கு வாழ்வின் இனிய துணையாகி வருவதைக் காண்கிறோம். இயற்கையைப் பற்றிய புதுப்புது ஆராய்ச்சிகளும் நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இயற்கை வாழ்விலேயே உலகமுழுதும் இன்புறுக நாளை நான் இன்னும் சில ஆண்டுகளில் எதிர்பார்க்கிறேன்.

இயற்கை முறைகளில் எனது அநுபோகத்தை சிலவியாசங்களாகத் தொடர்ந்து எழுதத் துணிந்துள்ளேன். அடுத்தமுறை, ‘மனிதனும் இயற்கையும்’, என்பதைப்பற்றி எழுதஉன்னியுள்ளேன்.

* * *

வேண்டுகோள்.

தமிழ்நாட்டாருக்கு ஒரு விஷயத்தை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மகாத்மாகாந்தி இதுகாறும் பிரயாணம் செய்துள்ள மாகாணங்களிலெல்லாம் அந்தஸ்து, சாதி, வகுப்பு, தொழில், சமய வேற்றுமைகளை அறவேமறந்து எல்லா ஜனங்களும் மகாத்மாவை வரவேற்பதிலும், அவருடைய இயக்கத்துக்கு உதவி புரிவதிலும், முன் வந்து ஒத்துழைத்திருக்கிறார்கள். கதர் இயக்கம் கட்சியையும், அரசியலையுமே கடந்து நிற்கும் இயக்கமென்று சொல்லவேண்டுவதில்லை. அம் மாகாணங்களைப் பின்பற்றித் தமிழ் நாட்டாரும், தமிழ் நாட்டைத் தங்கள் தற்கால வாசஸ்தலமாகக் கொண்டுள்ளவர்களும் அடிகளின் சுற்றுப் பிரயாண ஏற்பாடுகளில் ஒத்துழைக்க முன் வருவார்களென்றும், இச் சுற்றுப் பிரயாணத்தினால் அவருடைய உடம்புக்கு ஓய்வும், ஆன்மாவுக்குத் திருப்தியும், அவர் இயக்கத்துக்கு உதவியும் கிடைக்குமாறு செய்வார்களென்றும் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

ஸ்ரீ, சுப்பிரமணிய சிவத்தின்

ஜீவிய சரித்திரம்,

(முன் ௱௭௯-ம் பக்கத் தொடர்)

''தேசபக்தன்'' எழுதியது.

ஒருவன் தனக்கு மோக்ஷோபதேசம் செய்ய வேண்டுமென்று இவரை யிடைவிடாது தொந்தரை செய்து வந்தான். ஒரு நாள் மாலை எட்டுமணி யிருக்கும். இவர் அவனை யிட்டுக்கொண்டு, திண்டுக்கல்லுக் கடுத்த காட்டுக்குச் சென்று அங்கு ஒரு புதரினுள் நுழைந்து அவனைக் கீழே யுட்காரவைத்து, ''கண்ணை மூடிக்கொண்டு சிவ, சிவ, என்று சொல்லிக் கொண்டிரு. நான் கூப்பிட்டாலொழிய கண்ணைத் திறவாதே. பயப்படாதே. நானும் இங்கேயே இருக்கிறேன்''என்றார். அவன் அப்படியே கண்களை மூடிக்கொள்ள, அவர் மெல்ல சந்தடி செய்யாமல் வெளியே வந்துவிட்டார். கொஞ்சநேரம் கழிந்த வுடன், அவனுடைய மனத்திலே பயம்தோன்ற, அவன் மெல்ல பக்கத்திலே கைகளினாலே தடவிப்பார்த்தான். அவர் இல்லாதிருப்பதை யுணர்ந்து, கண்களைத் திறந்துபார்த்தான். பயம் மேலிட்டு விட்டது. நடு நடுங்கி அலறிக்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு வெளியே வந்து சேர்ந்தான்.

இத்தகைய பெரியாருக்கு ஸ்ரீ சிவத்தின்மீது அபரிமிதமான அன்புவிழ ஆரம்பித்து விட்டது. அப்பொழுது ஸ்ரீ சிவத்துக்குப் பதினாறுவயது. அவருடைய பெருமையைப்பற்றி அவ்வூரிலே சொல்லிக் கொள்வதைக் கேட்டு, ஸ்ரீ சிவத்துக்கும் அவர்.மீது பரமப் பிரேமை யுண்டாய்விட்டது. ஒருநாள் இரவு குழந்தைகளெல்லோரும் தூங்கிவிட்டனர். ஸ்ரீ சிவமும் உறங்கிவிட்டார். அப் பெரியார் வாசற்கதவைத் தட்டி, கதவு திறக்க, உள்ளே வந்து,''உண்ணச் சோறுபோடுங்கள்''என்று கேட்டார். சோற்றிலே தண்ணீர் விட்டிருந்தது. அந்தச் சோற்றை ஒரு இலையிலிட்டு அவருக்கு வைத்துச் சில ஊறுகாய்களும் பரிமார, அவர் குழந்தைகளெல்லோரையும் எழுப்பி அவர்களுக்கும் சாதம்போட வேண்டுமென்று சொன்னார். அவ்வாறே

எல்லாக் குழந்தைகளுக்கும் இலையில் சோறிடப்பட்டது. பெரியார் தம் முன் வைத்திருந்த சோற்றில் காறிக் காறி நிறைய எச்சிலை யுமிழ்ந்து, அச் சோற்றை நன்றாகப் பிசைந்து குழந்தைகளுக்கு ஆளுக்கொருபிடி எடுத்துவைக்கும்படி சொன்னார். அந்த எச்சில் சோற்றை ஒரு குழந்தையும் உண்ணவில்லை; ஆனால் ஸ்ரீ சிவம் கொஞ்சமும் யோசியாது அதை யுண்டு விட்டார். ஸ்ரீ சிவம் அப்பொழுது கண்வலியுடன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அப் பெரியார் அதைப்பார்த்துத் தமது எச்சிற் சோற்றில் கொஞ்சம் எடுத்து ஒரு சிறு துணியிலே வைத்துச் சுற்றிக் கொடுத்து அதைக் கண்ணிமேல ஒத்திக் கொள்ளச் சொன்னார். அப்படியே ஸ்ரீ சிவம் செய்ய, மறுநாள் காலையில் கண்வலி சொஸ்தமாகிவிட்டது. இதனாலெல்லாம் ஸ்ரீசிவத்துக்கு அவரிடத்து அரை வினாடியும் மறவாத அந்தரங்கப் பக்தி மேலிட்டது; அவருக்கும் அளவற்ற அன்பு உண்டாய்விட்டது. ஸ்ரீ சிவத்துக்கு இவர்மீது இடைவிடா ஞாபகம் ஏற்பட, அவரும் அடிக்கடி இவரிடத்துக்கு வரலாயினர். இப் பெரியார் தமக்கு உபதேசித்த முறையை ஸ்ரீ சிவம் தமது சச்சிதானந்த சிவம் என்னும் புத்தகத்து முகவுரையில் விளக்கமாகக் கூறியுள்ளாராதலினால், இங்கு அதனைப்பற்றி எழுதவில்லை. இப் பெரியாரே ஸ்ரீ சிவத்தினுடைய வாழ்க்கையில் சந்யாச தர்மத்தைப் புகுத்தி, ஸ்ரீ சிவத்தை ஏகாங்கியாக்கிவிட்டவர்.

பின்னர், ஸ்ரீசிவம் மறுபடியும் திருவனந்தபுரம் வரவேண்டியதாயிற்று. இப்பொழுது இவருக்கு தைரியம் மேன்மேலும் அதிகமாயிற்று. குழந்தைப் பருவத்திலே விளையாட்டுகளிலே பிரியமில்லாதவர், துஷ்டர்களுடனே சேராதவர் இப்பொழுது விளையாட்டுக்களிலே மும்முரமாகப் புகுந்துவிட்டார், முகம்மதியர்களுடனே சகவாசம் செய்யத் தொடங்கி, குஸ்தி, சிலம்பம் முதலிய சரீராப்பியாசங்களிலே கைதேர்ந்து விட்டார். இரவும் பகலுமாக துஷ்டர்களுடைய சாகவாசமே யாயிற்று. எப்பொழுது பார்த்தாலும் எவருடனாவது "அடிபிடி" தான். தம்மை யொத்த வயதுப் பிள்ளைகள் பலரையும் சகபாடிகளாகக் கொண்டு, அவர்களுக்குத் தலைமை வகித்து வந்தார். இவர் வீட்டுக்குப் போவதில்லை; தனியே மேல்மாடி யொன்று வாடகைக்

கமர்த்திக்கொண்டு, அதில் இவரும் இவருடைய சகபாடிகளும் கூடி யாடி யார்பரித்து வசித்து வந்தனர். எத்தனையோ தடவைகளில் "அடிபிடி" குற்றங்களுக்காக இவரைப் போலீசார் பிடித்துச் சென்றிருக்கின்றனர். அத்தனை தடவைகளிலும் இவருடைய பிதா சென்று பரிந்துபேசி இவரை விடுவித்து வந்திருக்கின்றனர். ஒரு தரம் இவர் மீது நீதிஸ்தலத்திலும் வழக்குத் தொடரப் பட்டது. அதிலும் தந்திரம் செய்து, எதிர்க்கட்சியுடன் ராஜிசெய்து கொண்டார். இவருடைய விளையாட்டுச் செயல்களிலே இங்கு இரண்டொன்று குறிப்பிடுகிறேன்.

ஒரு சமயத்தில் இவரும் இவருடைய சகாக்களுமாகச் சேர்ந்து மாந்தோப்பு ஒன்றிலே சென்று மாம்பழம் பறித்தார்கள். இவர் மரத்தின் மீது ஏறியிருந்தார். தோட்டக்காரன் மெல்லச் சென்று அருகிலிருந்த ஒரு போலீஸ்காரனை யிட்டுக் கொண்டு வந்து விட்டான். போலீஸ்காரனைக் கண்டவுடனே, கீழேயிருந்த பிள்ளைகளெல்லோரும் ஓடிவிட்டனர். போலீஸ்காரன் இவர் ஏறியிருந்த மரத்துக் கிளையின் கீழே வந்து நின்றுகொண்டு இவரைக் கீழே இறங்கச் சொன்னான். அவர் தாம் கீழே குதித்துவிடுவதாகவும் அவன் கொஞ்சம் ஒதுங்கி நிற்கும்படிக்கும் கூற, அவன் அவ்வாறேசெய்ய, இவர் கிளையைப்பிடித்துக் கொண்டு ஊசலாடுவதுபோல் ஆடி அவன் மார்பில் ஒரு உதை உதைத்து விட்டு திடீரென்று கீழே குதித்து ஓட்டம் பிடித்துவிட்டார். உதையினால் கீழே விழுந்த போலீஸ்காரன் எழுந்திருப்பதற்குள் இவர் ஓடியே போய்விட்டார்.

இன்னொரு சமயத்தில் இவரும் இவரது சகாக்களும் ஒருவனை, அவன் கொஞ்சம் பலசாலியா யிருந்துகொண்டு சிறுபிள்ளைகளை யிம்சித்து வந்ததினால், அடிப்பதாகத்தீர்மானித்தார்கள். ஒரு நாள் இரவு சுமார் 12 மணி இருக்கும். அவன் ஒரு திண்ணையில் ஐந்தாறு பெயர்களுக்கு நடுவே படுத்திருந்தான். இவர், அங்கு படுத்துக்கொண்டிருந்த அவர்களுள் அவன் எவன் என்று தெரியாதபடியினால், ஒவ்வொருவர் பக்கத்திலும் படுத்திருந்து மெல்ல போர்வையைத் தூக்கிப் பார்த்து, கடைசியாக அவனைக் கண்டு கொண்டு, அவன் பக்கத்தில் உட்கார்ந்து

அவனுடைய கழுத்துக்குக் கீழே தமது இடது கையைக்கொடுத்து, அவனைச் சட்டென்று உட்காரவைத்து, அவனை அறை அறையென்று அறைந்துவிட்டு ஓடிவிட்டார். அவனை யுட்காரவைத்து அடித்ததற்குக் காரணம், தூங்குகிறவனை யடிக்கக்கூடாதென்று யுத்த தர்மம் கூறுகின்றதாம். (தொடரும்.)

நீதியின் நிலையம்.

பரதன்.

(முன் ௱௭௰-ம் பக்கத் தொடர்)

(திருவாளர். ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. எ., பி. எல். எழுதுவது.)

அப்பொழுது பரதன் குகனை நோக்கி, "ஐய! நம் தமயனான இராமன் இங்கு எவ்விடத்தில் தங்கினான்?" என்று மனங் குழைந்து வினவினான். குகனும் பரதனுடன் விரைந்து சென்று, இராமன் தங்கியிருந்த இடத்தைக் காட்டினான்.

> "காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
> வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
> பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரல் பரவை புக்கான்
> வார்மணிப் புனலால் மண்ணை மண்ணுநீ ராட்டும் கண்ணான்."

என்று கம்பர் பெருமான் கனிந்துரைக்குமாறு தமயன் வைகிய இடத்தைக் கண்ட பரதன் உள்ளம் நைந்து உருகுவானாயினான். "ஐயனே! யான் இழைத்த தீமையால் அரச போகத்தை நீத்தாய். இக் கானகத்தில் காயும் கிழங்கும் அயின்றாய். அரிய புல்லில் துயின்றாய். இதனை யெல்லாம் அறிந்தும் இன்னும் பாவியேன் ஆவி துறந்திலேன்" என்று மனப்புழுங்கி அழுதான். அப்பால் குகனை அன்பொடு நோக்கி, "ஐயனே! என் தமயனைப் பிரியாது பின் தொடர்ந்த பெருமை வாய்ந்த இளையவன் எங்கே துயின்றான்?" என்று இனிய மொழிகளால் வினவினான். அப்போது வேடர் வேந்தன் மனம் குழைந்து,

"அல்லையாண் டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்ததோளாய், கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண்பளவும் நின்றான் இமைப்பிலன்நயன மென்றான்."

"ஐய! வீரனான இளையவன் வில்லும் கையுமாக விடியுமளவும் கண்ணீர் சொரிந்து கொண்டு பெருமூச் செறிந்து இமைப்பொழுதும் கண்ணிமையாமல் இருவரையும் பாதுகாத்து இவ்விடத்திலேயே நின்றான்." என்று கல்லும் கரைந்துருகும் கனிந்த மொழிகளால் எடுத்துரைத்தான். இதைக் கேட்ட பரதன் சிந்தை அழிந்து, "அந்தோ! இராமனுக்கு நானும் தம்பியாய்ப் பிறந்தேன்! இலக்குவனும் தம்பியாய்ப் பிறந்தான்! ஆயினும் அப் பெருமான் என்னால் எப்பொழுதும் துன்பமே அடைந்தான்! அத்துன்பத்தை நீக்க இலக்குவன் அமைந்தான். எனது அன்பின் திறம் மிகநன்றாயிற்று." என்று தன்னிலையை நினைந்து உருகினான். அப்பால் குகனை நோக்கி, "ஐயனே! எம்மை இக் கங்கை யாற்றைக் கடத்தி விடுவாயாயின் இடர்க் கடல் கடந்து இராமனை அடைந்த பேறு பெற்றவர்க ளாவோம்" என்று சொல்லி அன்று முழுவதும் இராமன் துயின்ற இடத்திலேயே பொன் உடம்பு புழுதியில் தோய பரதன் பொழுது போக்கினான். குகனும் பரதனது கருத்திற் கிசைந்து பொழுது புலர்ந்ததும் பரதனது சேனையை யெல்லாம் தனது நாவாயில் ஏற்றி அக்கரை சேர்த்தான். அப்பால் கோசலை முதலிய தேவியர் மூவரும், பரதனும் தம்பியும், குகனும் தேர்ப்பாகனும் ஓர் படகில் எறினார்கள். அப்பொழுது தேவரும் தொழுதற்குரிய தேவியாய் விளங்கிய கோசலையைக் கண்ட குகன் பரதனை நோக்கி, "ஐய! இவ்வம்மையார் யாரென அருளவேண்டும்" என்று வினயமாய் வினவினான். அந்நிலையில் பரதனது கண்களில் கண்ணீர்பொங்கிற்று. கோசலா தேவிக்குத் தானிழைத்த தீமையை நினைந்து நெஞ்சம் குழைந்து குகனை நோக்கி, "ஐய, இவர் மன்னர் மன்னனான தசரதனது முதல் தேவி. இம் மூன்றுலகுக்கும் முதல்வனான திருமகனைப் பெற்றும் யான் பிறந்த பாவத்தால் பெருமை யிழந்த பெரியாள்" என்றுகூறிப் பெருமூச்செறிந்தான்.

இராம வீரனைப் பயந்த அன்னையே அத் தேவி என்றறிந்த குகன் அம்மாதின் மலர்ப்பாதங்களில் விழுந்து மனம் குழைந்து அழுவானாயினான். இதைக் கண்ட கோசலை மனம்பொறாது தன் மைந்தனை நோக்கி, “அப்பா, இவன் யார்?” என்று அன்போடு வினவினாள். இதற்கு மாற்றம் உரைக்கப் போந்த பரதன், “அன்னையே! இவன் இராகவனுக்கு இனியதோழன். இலக்குவனுக்கும் இளையவனுக்கும் எனக்கும் தமயன். குகனென்னும் பெயரமைந்த குரிசில்,” என்று கூறினான். அப்போது கோசலை முகமலர்ந்து, அழுது நின்ற குகனுக்கு ஆறுதல் அளித்து அவனைத் தன் மைந்தருள் ஒருவனாகவே கருதி, “நீவிர் ஐவரும் ஒருவராய் இவ்வகன்ற உலகை நெடுங்காலம் ஆள்வீர்” என்று ஆசி கூறினாள். அப்பால் அறமே உருவமைந்தாற்போல நின்ற இளந்தேவியைக் குகன் இனிது நோக்கி, அம்மாதை யாரென்று அறிய ஆவலுற்றான். அதனை யறிந்த பரதன், “ஐய, அறநெறியைக் காக்குமாறு ஆவிதுறந்த அரசனது இளந்தேவி இவரே யாவர். இன்னும் எவரும் போற்றுதற்குரிய இராமன் பிறந்த பெருங் குலத்தில் அப் பெருமானது பின்னே பிறந்தானும் உளன் என்று உலகம் அறியுமாறு அவனைப் பிரியாது பின்தொடர்ந்து கானகம் சென்ற இலக்குவனைப் பெற்றெடுத்த பெரியாளும் இவளே” என்றான். இளந்தேவியின் பெருமையை அறிந்த குகன் இருகரங்களையும் குவித்து வணங்கி அடுத்து நின்ற தேவியை யாரென்று வினவினான். அப்போது பரதன், வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல வருந்தி, குகனை நோக்கி,

“படரெலாம் படைத்தாளை பழி வளர்க்கும் செவிலியைத்
    தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம்
    குறைந்து தேய
உடரெலாம் உயிரிலா எனத் தோன்றும் உலகத்தே
    ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல் இந் நின்றாள்
    என்னை யீன்றாள்.

“அந்தோ! இம் மாதை யார் என்று இன்னும் அறிந்திலையோ?

துன்பத்தை யெல்லாம் தோற்றுவித்துப் பழியை வளர்க்கும் பாங்கியாய் அமைந்து உயிரிழந்த உடல்போல வருந்தும் இவ் வுலகத்தில் இறையளவும் இடரில்லா முகத்தோடு விளங்கும் இவளே என்னை யீன்ற அன்னை.” என்று மிகுந்த சோகத்தோடு மொழிந்தான். இரக்க மற்ற இம்மங்கையையும் தாயென்றெண்ணி குகன் கைகுவித்து வணங்கினான்.

இவ்வாறு தேவியரும் மைந்தரும் கங்கையாற்றைக் கடந்து குகனிடம் பிரியா விடை பெற்று இராமன் இருந்த இடம் நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் வரத்தினா லுயர்ந்த பரத்துவ முனிவரது தவச்சாலையைச் சென்று சேர்ந்தார்கள். அம் முனிவர் பரதனையும் சேனையையும் அன்புடன் வரவேற்று ஆசிகள் கூறினார். அப்பால் சடைமுடியும் மரவுரியும் தரித்து நின்ற அரச மைந்தனை முனிவர் அயர்ந்து நோக்கி, “ஐய! நீயேன் இக் கோலம் கொண்டனை?” என்று அன்போடு வினவினார். அவ் வுரையைச் செவியிலேற்ற பரதன் சிறிது சீற்றங் கொண்டு, முனிவரை நோக்கி, “ஐயனே! மறைகளின் முதல்வனான இராமனுக்குத் தம்பியாய்த் தோன்றிய நான் முறை தவறி அரசுபுரிவேனோ? தனக்குரிய அரசாங்கத்தைஎன் தமயன் ஏற்றுக் கொள்ளானாயின் நானும் அவனோடு இக் கானகத்திலேயே வாழ்ந்து காலங்கழிப்பேன்” ஏன்று உறுதியாக எடுத்துரைத்தான். இவ்வுரைகேட்ட முனிவரும் மற்றையோரும் மனம் குளிர்ந்தார்கள். அப்பால் முனிவர் பரதனது தாயாருக்கும் சேனைக்கும் தன் சாலையில் அருஞ்சுவை அமுதளித்தார். ஆயினும் பரதன் அவ் வறுசுவை யுணவுகளில் ஒன்றையும் அருந்தாது காயும் கிழங்கும் அயின்று மண்மீது படிந்து இராப் பொழுதைப் போக்கினான். பொழுது புலர்ந்ததும் முனிவரிடம் விடை பெற்றுப் பரதனும் சேனையும் இராமன் தங்கியிருந்த பெரு மலையின் மருங்கே வந்து சேர்ந்தார்கள். (தொடரும்.)

மகாத்மா காந்தியின் மணிமொழிகள்.

திருவாளர் பொ. திருகூடசுந்தரம்பிள்ளை, எம். ஏ., பி. எல்;

மொழி பெயர்த்தது.

௫௯. சத்யாக்ரகி பரிகாரம் அடைவதற்காகத் தான் துன்பம் அநுபவிப்பதை விரும்புவானே யன்றி பிறர்க்குக் கஷ்டம் தருவதை விரும்பான்.

௯௰. சத்தியாக்ரகத்தை அநுஷ்டிப்பதனால் சர்க்காருக்குக் கஷ்டமேற்படலாம், ஆனால் சத்யாக்ரகி அதற்காக சத்யாக்ர அநுஷ்டானத்தை விட்டுவிடமாட்டான்.

௯௧. அரசாங்கத்திற் காயினும் வேறெவர்களுக் காயினும் கஷ்டம் கொடுப்பது என் கொள்கைக்கு விரோதம், இப்படிச் சொல்வதிலிருந்து என் செய்கைகளால் கஷ்டம் ஏற்படாது என்று கருதவேண்டாம். கஷ்டம் ஏற்படலாம். ஆனால் தீங்கிழைப்பவன் ஒருவனுக்கு உதவி மறுத்து அதன்மூலமாய் அவன் தீமையை எதிர்க்கும் பொழுது அவனுக்கு விளையும் கஷ்டத்திற்கு சத்யாக்ரகி பொறுப்பாளி யல்லன்.

௯௨. முற்றிலும் எழுத்தறி வில்லாதவனும் சத்யாக்ரக தத்துவத்தை எளிதில் அறிந்து அநுஷ்டிக்கக் கூடும்.

௯௩. ஒருவன் குற்றஞ் செய்திருந்தால் அதை ஒப்புக்கொண்டு அதற்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்ளவேண்டும். குற்றஞ் செய்திரா திருந்தும் குற்றவாளி யென தீர்ப்புச் சொல்லப்பட்டால், அப்பொழுது தண்டனை அவனுக்கு எவ்விதத்திலும் அகௌரவம் ஆகாது. அவன் ஒரு சத்யாக்ரகி யாயின், சிறைவாசக் கஷ்டங்களுக்குப் பயப்பட நியாயமில்லை.

௯௪. சத்யத்தோடு அஹிம்சையைச் சேர்த்து விட்டால், இவ் வுலகத்தை நம் காலில் பணியும்படி செய்யலாம்.

TALISMANS AND CHARMS

For those People to avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful life.

	Rs.	A.
For Honour, Riches, Learning and Greatness	7	8
For Health, Physical Strength, etc.	7	8
For Power of Eloquence, Speeches, etc.	7	8
For Success in any Undertaking or Litigation, etc.	10	0
For Success in Sport, Racing, Cards, Games of Chance etc	7	8
For Success in Spiritual and Religious Life	10	0
For Success in Trade and Business	10	0
For Men's Love to Women	7	8
For Women's Love to Men	10	0
For Love of Opposite Sex. Attractive Power	7	8
For Agricultural Prosperity. Farming, Good Crops, etc.	7	8
For Success in Mining Plumbago, etc.	100	0
For Success in Gemming	225	0
Rabbi Solomon's Special Talisman for every success	15	0
Specially valued and worn by every successful Hebrew.		
2nd qualiy	21	0
1st quality	30	0

NOTE.— A Money Order or G C Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15, two Rs 25, treeh Rs. 30 or more at a time at Rs. 10 per reading. Remit with birth date. Always the full amount should be remitted in advance.

No V. P. P- APPLY TO.—

D. A. RAM DUTH, Astrologer,
No. 30 & 55 (U. B.) Cheku Street,
COLOMBO. (Ceylon).

சீர மர்ம சாஸ்திரம்.

இந்த அருமையான நூலில் ஸ்திரி புருஷர் அநுபவிக்க வேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸ்யம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக்கிடக்கின்றன. விவாகமானவர்களுக்கும், இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது.

64- படங்களுடன் விலை ரூ 1—0—0

மாணிக்க விலாசம் பிரஸ், நெ. 12, அருணாசல முதலி தெரு. சௌகார்பேட்டை, சென்னை.

வடாம்! வத்தல்!! அப்பளாம்!!!

பிராமணரால் செய்யப்பட்ட நயமான சாமான்கள்

நல்லதாகவும் ருசியாகவும் லேகுவாய் ஜீரணமாகக்
கூடியதாகவும் செய்யப்பட்டது.

எல்லாக் காலங்களிலும் உபயோகிக்கலாம்
சாப்பிடுவதற்கு இன்றியமையாதது.

1. வாழைத்தண்டு வடாம்
2. தேங்காய்த்துருவல் வடாம்
3. கரி வடாம்
4. அரிசி வடாம்
5. கலவை வடாம்
6. கூழ் வடாம்
7. அவல் வடாம்
8. நயம் அப்பளாம்
9. மோர் மிளகு வத்தல்

☞ சகாயமான விலைக்கு மொத்தமாகவும்
சில்லரையாகவும் கொடுக்கப்படும்.

ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்.

[ஆர்டருடன் கால் பங்கு அட்வான்ஸ் அனுப்பவும்.]

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதித் தருவித்துக்கொள்ளவும்:

எஸ். ஆர். சுப்பிரமணிய அய்யர், காபி ஹோட்டல் & வியாபாரம்
திருநெல்வேலி ஜங்ஷன்.

ஸ்ரீசுந்தரம் சாய நெசவு கம்பெனி லிமிட்டெட்
திருநெல்வேலி.

இந்திய மில் 20 நிர் நூல் 54'' அகலம் பலவிதக் கரை, சலவை வேஷ்டி	கஜம் 1-க்கு ரூ	0	8	0
ஷை 40 நிர். ,, ,,	கஜம் 1-க்கு ரூ	0	9	0
கெட்டுவில் சலவை 4x7 கஜம் 34'' அகலம்	மடி 1-க்கு ரூ	2	8	0
ஷை ,, 4x6 ,, 34'' அகலம்	மடி 1-க்கு ரூ	2	4	0
ஷை. ,, 4x8 ,, 36'' அகலம்	மடி 1-க்கு ரூ	3	0	0
36''x2 கஜம் கெட்டிச்சாய ஜமக்காளம்	உரு 1-க்கு ரூ	3	0	0
28''x12 கஜம் ஷர்டிங் சலவை பீஸ்	1-க்கு ரூ	3	0	0

☞ கூட்ஸில் மட்டும் ரயில் சார்ஜன்னியில் சரக்குகள் அனுப்பக்கூடும். ரொக்கவிலை.

Printed at the Meeraniah Press, Tinnevelly
and Published by P. Ramaswamy Ayengar, Tinnevelly.